Registered as a newspaper in Ceylon.


# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | பங்குனி – 1972 | விலை 30 | இதழ் 3 |
|---|---|---|---|---|

## விசுவாசக் கண்கொண்டு பார்ப்போம்

தவக்காலத்தில் இயேசுவின் திருப்பாடுகளையும் மரணத்தையும் நாம் சிறப்பாகத் தியானிக்கவேண்டும், ஆகவே நமது மீட்பின் ஒரு சில மறை உண்மைகளை இப்போது நினைவுகூர்தல் நன்றாகும்.



ஆதாமின் பாவத்தின் விளைவாக மனுக்குலம் முழுவதும் பாவத்திற்கும் பசாசிற்கும் அடிமைப்பட்டிருந்தது. இவ் அடிமைத்தனத்திலிருந்து மனுமக்களை மீட்க இறைவன் தம் திருமகனை உலகிற்கு மனிதனாக அனுப்பினார்: "ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது அதற்குத் தீர்ப்பளிக்க அன்று, அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே," (அரு. 3 : 16 – 17)

"நாம் பாவத்தால் வலுவற்றிருந்த போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து பாவிகளுக்காக இறந்தார்; நீதிமானுக்காக ஒருவன் தன் உயிரைக் கொடுத்தல் அரிது – ஒருவேளை நல்லவன் ஒருவனுக்காக யாரேனும் தன் உயிரைக் கொடுக்கலாம். ஆனால், நாம் பாவிகளாய் இருந்த போதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்; இதனால் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பை எண்பிக்கிறார்: ஆகையால், நாம் இப்பொழுது கிறீஸ்துவின் இரத்தத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி அவர் வழியாய் இறுதித் தண்டனைக்குத் தப்பி மீட்புப் பெறுவோமென மிக உறுதியாய் நம்பலாமன்றோ?" (உரோ. 5 : 6 – 9).

"மனுமகனில் விசுவாசங் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு

(16ம் பக்கம் பார்க்கவும்)

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## (31) உறுதிப் பூசுதல் பெற ஆயத்தம்.

ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் மாத்திரமே உறுதிப்பூசுதலைப் பெறமுடியும். "கிறிஸ்த மறையைத் தழுவும் சடங்கு முழுவதுடன் உறுதிப்பூசுதல் என்னும் திருவருட் சாதனம் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு மிகத் தெளிவாக வெளிப்படும் பொருட்டு" (இறைபணி, 71), இத்திருவருட் சாதனம் ஞானஸ்நானத்தை அடுத்து அளிக்கப்படவேண்டும். ஆனல், உறுதிப்பூசுதல் பெற்றவர்கள் திருச்சபையில் முதிர் பருவத்தை அடைந்தவர்களாய், பூரண கிறிஸ்தவர்களாய்க் கணிக்கப்படுவதால், அவர்கள் புத்தி விபரம் அறிந்த பின்பே, அதாவது, 7வது வயதை அடைந்த பின்பே, அதைப் பெற்றுக்கொள்ளல் உத்தமமெனத் திருச்சபை கருதுகின்றது.

"உறுதிப்பூசுதலினல் நாம் கிறிஸ்துநாதருடைய போர் வீரராக்கப்படுகின்றேம். ஒரு போர்வீரன் தனக்காக அல்ல, பிறருக்காகவே செயலாற்றவும் போர்புரியவும் வேண்டும்" (11ம் பத்திநாதர் இஸ்பானிய பிரதம ஆயருக்கு 10-11-31ல் எழுதிய கடிதம்). உறுதிப்பூசுதல் பெற்றவர்கள் "கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளாய்ச் சொல்லாலும் செயலாலும் விசுவாசத்தைப் பாதுகாக்கவும் பரப்பவும் மிகவும் கடமைப்பட்டுள்ளனர்" (திருச்சபை இ. 11). சிறுபிள்ளைகள் இக்கடமைகளைச் சரிவர உணர்ந்து நிறைவேற்ற முடியாத நிலையிலிருக்கிறர்கள். வளர்ந்தவர்களோ சிறு பிள்ளைகளைப்பார்க்க கூடிய அறிவோடும், உணர்ச்சியோடும், பத்தியோடும் இத்திருவருட் சாதனத்தில் பங்குபற்றி, கூடுதலான ஞான நன்மையையும் அடைவார்கள். ஆகவே, கூடிய அறிவோடும் பத்தியோடும் உறுதிப்பூசுதலைப் பெற்று, அதனல் வரும் கடமைகளை நன்ருக உணர்ந்து நிறைவேற்றக் கூடிய முதிர் பருவத்தை அடைந்தபின்னரே பிள்ளைகள் இத்திருவருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்தல் உத்தமமாகும்.

ஈடேற்றம் அடைதற்கு உறுதிப்பூசுதல் அவசியமான திருவருட் சாதனமன்று. எனினும், அதைப் பெற்றவர்கள் பயணம் செய்யும் திருச்சபையில் முதிர் நிலையையடைந்து, பரிசுத்த ஆவியையும் அவரது விசேஷ கொடைகளையும் பெற்றுக்கொள்வதால், அவர்கள் பரலோகத்திலும் ஒரு மேலான நிலையையும் சம்பாவனையையும் அடைந்து கொள்வார்கள் என்பது திண்ணம். ஆகவே, மரண ஆபத்தில் அல்லாது முதிர் வயதில் உறுதிப்பூசுதலைப் பெறமுடியாத நிலையில் இருக்கும் கிறிஸ்தவர்கள், அவர்கள் புத்தி விபரம் அறியாதவர்களாய் இருந்தாலுங்கூட, இத்திருவருட்சாதனம் அளிக்கும் ஞான நன்மைகளை இழந்துபோகாவண்ணம், அவர்கட்குத் தகுந்த காலத்தில் அது அளிக்கப்படவேண்டுமென்று திருச்சபை இப்போது கற்பிக்கின்றது.

புத்திவிபரம் அறிந்த கிறிஸ்தவர்கள் உறுதிப்பூசுதல் பெறுதற்கு, முதலில் தேவ அருள் நிலையில் இருக்கவேண்டும். ஏனெனில், உறுதிப்பூசுதல் உயிருள்ளவர்களின் திருவருட் சாதனமாகையால், அதைச் சாவானபாவ நிலையில் பெறமுடியாது. அடுத்தபடியாக, அவர்கள் திருமறைபற்றியும், சிறப்பாக உறுதிப்பூசுதல்பற்றியும் போதிய அறிவு உள்ளவர்களாகவும், ஞானஸ்நான வாக்குறுதிகளைப் புதுப்பிக்கக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஞானஸ்நானம் பெற்றவர்களை உறுதிப் பூசுதலுக்கு ஆயத்தப்படுத்துதல் கிறிஸ்தவ சமூகத்தின் பிரதான கடமைகளுள் ஒன்ருகும். ஞானஸ்நானம் பெற்ற யாவரும் கிறிஸ்தவ மறையில் நிறைவாகச் சேர்க்கப்படவும், அதற்குத் தகுந்தமுறையில் ஆயத்தப்படுத்தப் படவும் ஆவன செய்தல் ஞான மேய்ப்பர்களின் பொறுப்பாகும்.

முதிர் பருவத்தில் திருமறையைத் தழுவுவோர் திருச்சபையின் பழையகால முறைப்படி ஞானஸ்நானத்தோடு உறுதிப்பூசுதல்,

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்போஸ்தலரான புனித தோமையார்

## (3) சேர நாட்டில் புனித தோமையார்.

அப்போஸ்தலரான புனித தோமையர் இந்தியாவில் நற்செய்திப் பணி புரிந்தார் என்று கூறும் பழங்கால ஏடுகள் அவர் சேர நாட்டில் பணி ஆற்றியது பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. ஆனால், கேரள நாட்டில் **''புனித தோமையாரின் கிறிஸ்தவர்கள்''** என்ற சிறப்புப் பெயருடன் கிறிஸ்தவ மக்கள் பழங்காலத்திலிருந்தே வாழ்ந்து வருதல் புனித தோமையார் கேரள நாட்டில் திருப்பணி புரிந்தார் என்பதற்கு அசைக்க முடியாத ஒரு அத்தாட்சியாக விளங்குகின்றது. அவர்களது பராம்பரியக் கொள்கைப்படி புனித தோமையார் சேர நாட்டில் செய்த நற்செய்திப் பணியைச் சுருக்கமாய் ஆராய்வோம்.

கிறிஸ்தவ சகாப்தம் தொடங்கியபோது தென் இந்தியா சேர, சோழ, பாண்டி என்னும் மூன்று இராச்சியங்களாகப் பிரிந்து இயங்கிக்கொண்டிருந்தது. புனித தோமையார் கி. பி. 52ல் சொக்கொற்ரு என்ற தீவிலிருந்து (இது செங்கடலுக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ளது) சேர நாட்டிற்கு வந்து முசிறிஸ் அல்லது கொடுங்கல்லூர் (இது பின்பு கிறங்கனூர் என்று போர்த்துக்கேயரால் அழைக்கப்பட்டது) என்ற துறைமுகத்தில் இறங்கினர். அங்கு வியாபாரத்தின் காரணமாக ஏராளமான யூதர்கள் குடியேறியிருந்தனர். புனித தோமையார் அவர்களுக்குத்தான் முதலில் நற்செய்தியை அறிவித்து அவர்களுள் அநேகரைத் திருமறையில் சேர்த்தார். ஆனால், அவரது திருப்பணியின் பிரதான பாகம் இந்துக்கள் மத்தியில்தான் நடைபெற்றது. அவர் அவர்கள் மத்தியில் பல புதுமைகளைச் செய்து நற்செய்திப் போதனையை உறுதிப்படுத்தி, விசேஷமாக பல்லாயிரக்கணக்கான பிராமணரை இயேசுவின் சீடர்களாக்கினர். அத்துடன் அந்நாட்டு மன்னனையும், அவனது குடும்பத்தினரையும் மனந்திருப்பினர். அம்மன்னன் ஞானஸ்நானத்தின் போது பெலவேந்திரன் என்ற பெயரைத் தெரிந்துகொண்டான். அவனுடைய மருமக்களுள் ஒருவராகிய கெபா கொல்லம் என்பவர் குருவாகவும் அபிஷேகம் செய்யப்பெற்று, நற்செய்தி போதிக்கும் பணியில் புனித தோமையாருக்குப் பேருதவி புரிந்தார். புதிதாய் மனந் திரும்பியவர்களுக்கென புனித தோமையார் முசீறிஸ் பட்டணத்திலே முதற் கோவிலையும் கட்டி எழுப்பினர்.

புனித தோமையார் முசீறிஸ் பட்டணத்தில் மாத்திரம் திருத்தொண்டாற்றவில்லை. ஏறக்குறைய 20 ஆண்டுகட்கு சேர நாட்டின் கரையோரப் பகுதிகளைத் தரிசித்து, திருமறையைப் போதித்து திரள்திரளான மக்களைத் திருச்சபையில் சேர்த்தார். அவர்களது தேவைக்கேற்ப வெவ்வேறு இடங்களில் கோயில்களையும் அமைத்தார். இவ்வாறு பின்வரும் ஏழு ஊர்களில் ஆலயங்கள் அவராலேயே அமைக்கப்பட்டன என்று பழைய பராம்பரியம் கூறுகின்றது: 1. முசீறிஸ் 2. பழையூர் (பாலூர்) 3. பாரூர் (கோட்டைக்கவூர்) 4. கோட்டை மங்களம் 5. சாயல் 6. நிர்ணம் 7. கொல்லம்.

நமது மீட்பின் சின்னமாகிய திருச்சிலுவையைக் கிறிஸ்தவ மக்கள் என்றும் தமது கண்முன் வைத்திருக்கும்படி கிறிஸ்தவர்கள் உள்ள இடங்களில் புனித தோமையார் கற்சிலுவைகளை நிறுவி வைத்தார் என்றும் கூறப்படுகின்றது. கோயில் இல்லாத இடங்களில் கிறிஸ்தவர்கள் இச்சிலுவைகளடியில் ஒன்றுகக் கூடி இறைவழிபாடு நடத்தி வந்தனர். இத்தகைய பழைய கற்சிலுவைகளை கேரள நாட்டின் பற்பல இடங்களில் இன்றும் காணலாம்.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்த இடங்களிலெல்லாம் திருச்சபையை உறுதியாய் நிறுவினர். தங்களோடு புதுக் கிறிஸ்தவ மக்களுக்கு ஞானப் பணிபுரிய திருத்தொண்டர்கள், குருக்கள், ஆயர்களை அபிஷேகம் செய்து வைத்தனர். இவ்வாறு **அப்போஸ்தலர்களின் போதனை** என்ற பழங்கால நூல் கூறுவதுபோல், ''அப்போஸ்தலர்களின் மரணத்திற்குப்பின் திருச்சபையில் வழிகாட்டிகளும் தலைவர்களும் இருந்தனர். அவர்கள் அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்றுக்கொண்டவை, கற்றுக்

(5ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

## (1) வேதாகமம் என்றால் என்ன?

### அருட்திரு. R. S. லோப்பு அடிகள்

"வேதாகமத்தை அறியாமலிருப்பது கிறீஸ்துவை அறியாமலிருப்பதாகும்'' என்று புனித ஜெரோம் கூறிய கூற்றை IIம் வத்திக்கான் பொதுச்சங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது. ''நீர் படிப்பதின் பொருள் விளங்குகின்றதா?'' என்று வினவிய பிலிப்பு இடம், ''யாராவது எடுத்துச்சொன்னால் ஒழிய எப்படி விளங்கும்?'' என்று எத்தியோப்பிய அண்ணகன் முறையிட்டான் என்று அப்போஸ்தலர்பணி கூறுகின்றது (8, 30-31).

இறைமக்களுக்கு, திருமறைநூலில், சிறப்பாக நற்செய்தி நூல்களில், ஆழ்ந்த அறிவும் பழக்கமும் உண்டாகி, அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தி, கிறிஸ்தவ வாழ்வு வாழத் தூண்டுவதே நாம் எழுதவிருக்கும் கட்டுரைகளின் பிரதான நோக்கம்.

வேதாகமம் என்றால் என்ன? பலர் பல விதங்களில் வரையறுத்துக் கூறுவார்கள். ஆயினும், மிகச் சுருக்கமாக, ஆனால் நுணுக்கமாக, வரையறுத்துக் கூறின்: வேதாகமம் **''கடவுளின் வார்த்தை நூல் வடிவில்''** என்று கூறலாம். இங்கே **''வார்த்தை''** என்பது கிறீஸ்துவைக் குறிக்கும். வேதாகமத்தையும் கிறீஸ்துவையும் ஒரே சொல்லால் அழைக்குமிந்த புதிரைப் புரிந்துகொள்ள, யூதர்களும், சுவிசேசகர் அருளப்பரும் **''வார்த்தை''** என்னும் சொல்லுக்கு அளிக்கும் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ளல் வேண்டும்.

எழுதினவற்றைக்கொண்டு ஒருவிதத்தில், எழுதியவரை அறியலாம். எனவே, கடவுளின் வார்த்தை நிட்சயமாகக் கடவுளை எமக்கு எடுத்துரைக்கவேண்டும். வேதாகமத்தில், சிறப்பாக, கடவுள் தம்மை வெளிப்படுத்த விரும்பினார். வேதாகமத்தை, ஒருவிதத்தில் கடவுளின் **''சுயசரிதை''** (Autobiography of God) என்றும் வர்ணிக்கலாம். கடவுள் தம்மட்டில் எவ்விதம் இருக்கிறார் என்று கூறுவதைவிட, கடவுள் தம் மக்களுக்கு என்ன செய்தார் என்று வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. திரிதெந்தின் பொதுச் சங்கத்தைப் (Council of Trent) பின்பற்றி, வேதாகமத்தில் 72 புத்தகங்களும் (பழைய ஏற்பாட்டில் 45 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும்) இருக்கிறதாக கத்தோலிக்கர் ஏற்றுக்கொள்ளுகின்றனர். கத்தோலிக்கரல்லாதோர் பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் மாத்திரமிருப்பதாக ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

யூத சமயத்தினர், வேதாகமத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுத்தனர்: I. யூத சட்டம் (The Torah): இது ஐந்து புத்தகங்களைத் (ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்) தம்முள் அடக்கியுள்ளது. II. இறைவாக்கினர்களின் நூல்கள் (The Prophets): இது மூன்று பெரிய இறைவாக்கினர்களின் நூல்களையும், பன்னிரண்டு சிறிய இறைவாக்கினர்களின் நூல்களையும் கொண்டுள்ளது. III. படிப்பினை ஏடுகள் (The Writings).

கிறீஸ்தவர்கள் வேதாகமத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். I. சரித்திர சம்பந்தமான புத்தகங்கள் (Historical Books) II. படிப்பினை சம்பந்தமான புத்தகங்கள் (Didactic Books) III. இறைவாக்கினர்களின் நூல்கள் (4 Major Prophets: 12 Minor Prophets)

புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் அடங்கியிருக்கிறதாக, கத்தோலிக்கரைப் போன்று, கத்தோலிக்கரல்லாத கிறீஸ்தவர்களும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். பழைய ஏற்பாடுபோன்று, புதிய ஏற்பாடு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது: I. சரித்திர சம்பந்தமான புத்தகங்கள் (Historical Books) (மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர் ஆகிய நான்கு சுவிசேச

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதாகமத்தைப் ...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கர்களும், அப்போஸ்தலர்பணியும்) II. படிப்பினை சம்பந்தமான புத்தகங்கள் (Didactic Books) (புனித சின்னப்பரின் 14 திருமுகங்களும், 7 பொதுத் திருமுகங்களும்) III. திருவெளிப்பாடுநூல் (Prophetic Book-Apocalypse) என்பன.

வேதாகம நூல்கள் ஏறக்குறைய ஒரே அளவான அதிகாரங்களாக முதன்முதலில் 13ம் நூற்றுண்டில் பிரிக்கப்பட்டன. பரிஸ் நகரின் கலாசாலையின் விரிவுரையாளர் STEPHEN LANGTON என்பவரே இதைச் செய்தார். தற்போதைய வாக்கியப் பிரிவுகள் 1551ம் ஆண்டு அச்சடிப்பாளரான ROBERT ETIENNE என்பவரால் ஒழுங்கு செய்யப்பட்டது. ★

## இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

தேவநற்கருணை என்னும் திருவருட்சாதனங்களையும் பெற்றுக்கொள்ளுதல் உத்தமமாகும். ஆனல், இவற்றைப் பெறுமுன் அவர்கள் கத்தோலிக்க திருமறையை நன்ருக அறிந்து கிறிஸ்தவ வாழ்விற்குச் சாட்சியம் அளிக்கவும், அப்போஸ்தல பணியில் ஈடுபட்டு உழைக்கவும், போதனை, பயிற்சி, திருவழிபாடு ஆகிய வழிவகைகளால் தகுந்த காலத்திற்கு ஆயத்தப்படுத்தப்படவேண்டும். இப்பணியில் மேய்ப்பர்கள் மட்டுமல்ல, வேதியரும், ஞானப் பெற்றேரும், கிறிஸ்தவ சமூகத்தின் உறுப்பினர் அனைவருமே பங்கெடுக்கவேண்டும்.

உறுதிப்பூசுதலைப் பயனுடன் பெறுதற்கு புத்திவிபரம் அறிந்த பிள்ளைகளை ஆயத்தப்படுத்துதல் பெரும்பாலும் அவர்கள் பெற்றேரின் பொறுப்பாகும். இப்பொறுப்பு உறுதிப்பூசுதல் திருச்சடங்கில் பெற்றேர் நெருங்கிய முறையில் பங்குகொள்வதால் சுட்டிக்காட்டப்படுகின்றது. தங்கள் பிள்ளைகளின் உள்ளங்களில் விசுவாச மனப்போக்கை உருவாக்கிப் படிப்படியாக வளர்ப்பதாலும், திருமறைப் பயிற்சியளிக்கும் நிறுவனங்களின் உதவியை நாடுவதாலும் பெற்றேர் இப்பொறுப்பைச் சரிவர நிறைவேற்றலாம்.

மரண ஆபத்திலிருக்கும் புத்திவிபரமறிந்த கிறிஸ்தவர்கள் உறுதிப்பூசுதல் பெறமுன், அவர்கள் வயதிற்கும் நிலைமைக்கும் ஏற்ற முறையில் ஆயத்தப்படுத்தப்படவேண்டும். ★

## அப்போஸ்தலரான...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டவை ஆகிய யாவற்றையும் மக்களுக்குப் போதித்தனர்".

வட இந்தியாவில் செய்ததுபோல சேர நாட்டிலும் திருச்சபையை உறுதியாய் நிறுவி வளர்க்க புனித தோமையார் தாம் அமைத்த ஏழு கோயில்களுக்கும் ஏழு குருக்களை அபிஷேகம் செய்து வைத்தார். அவர்கள் நற்செய்தியை மக்களுக்குப் போதிப்பதிலும், திருப்பலி ஒப்புக்கொடுப்பதிலும், திருவருட்சாதனங்களை வழங்குவதிலும் அவருக்குத் துணை புரிந்தனர். அவர்களையும் கிறிஸ்தவ சமூகம் முழுவதையும் தமக்குப் பதிலாக கண்காணித்து வழிநடத்தவும், அப்போஸ்தலர்களோடு வாரிசுத் தொடர்பை ஏற்படுத்தவும், அவர் இரு ஆயர்களையும் அபிஷேகம் செய்து, முழு நாட்டையும் இரு பாகங்களாய்ப் பிரித்து, வடபாகத்திற்கு ஒருவரையும், தென் பாகத்திற்கு மற்றவரையும் பொறுப்புள்ள ஆயர்களாக நியமித்தார். வடபாகத்தின் ஆயருக்கு முசிறிஸ் (கொடுங்கல்லூர்) பட்டணத்தையும், தென்பாக ஆயருக்கு கொல்லம் பட்டணத்தையும் இருப்பிடங்களாக நியமித்தார். இவர்கள் இருவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் — பெலவேந்திரன் அரசனின் மருமக்கள்: ஒருவரின் பெயர் - கெபா கொல்லம், மற்றவரின் பெயர் – போல் பெருமாள்.

இவ்வாறு பல ஆண்டுகளாகச் சேர நாட்டில் திருமறையைப் போதித்து, திருச்சபையை உறுதியாய் ஏற்படுத்தியபின், கிறிஸ்துவின் நற்செய்தியை தென் இந்தியாவின் பிறபாகங்களிலும் அறிவித்து அங்கு வாழ்ந்த மக்களுக்கும் ஈடேற்றத்தின் வழியைத் திறந்து வைக்கும்படி புனித தோமையார் தென் இந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்த சோழ நாட்டிற்குப் பயணமானர். அங்கு அவர் சொற்ப காலம் மாத்திரமே ஞானத் தொண்டாற்றக் கூடியதாயிருந்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றதாய் மகனை மறந்தாலும்......

எஸ் எஸ். யேசுதாஸ், மறையாசிரியர்.
சின்னக்கடை, திருகோணமலை.

"வாடாத பூ என்ன பூ?" "இது தெரியாதா? அன்பு" என்று விடுகதை கூறிச் சிறுர்கள் விளையாடுவதை நாம் கேட்டிருக்கின்றேம். இது விடுகதையானுலும் வெற்றுக் கதையன்று. ஆழ்ந்த அரும்பொருள் இதன் கண் துலங்குவதாம். வான் வெளியில் எண்ணிக்கையில்லாக் கோளங்கள் ஏந்துவாரின்றி எப்பக்கமும் நழுவாது சுழல்கின்றன. இதனை விளக்கப் புகுந்த அறிவியல் வல்லுநர்கள், ஒவ்வொரு கோளமும் தம்மகத்தே கொண்டுள்ள ஈர்ப்புச் சக்தியினுலேயே ஒன்றையொன்று பற்றி வழுவாது நிற்கின்றன என்று மொழிந்துள்ளனர். இதேபோன்று மனித வாழ்வினையும் அன்பு எனும் ஈர்ப்புச்சக்தியானது பிணித்துச் சுழலவைக்கின்றது. ஆதலினுற்றுன் அறிவு சான்ற முன்னேர்கள் "அன்பு உலகிற்கு அச்சாணி உடைத்து" என்று கூறி வைத்தனர் போலும். எனவே "அன்பில்லா வாழ்வு பாழ்" என்று கூறினுலென்ன ?

அன்பில்லாது வாழ்வே இல்லை, அன்பில்லாது உறவே இல்லை, அன்பில்லாது உலகே இல்லை. ஏனெனிற் கூறுதும். அன்பினுலன்றே இறைவன் மனிதனைப் படைத்தார்; அம்மனிதனுக்காகவன்றே உலகினைப் படைத்தார். அப்படியிருக்க, இறையன்பின் வெளிப்பாடான மனிதன் அன்பில்லாது வாழ்தல் ஒல்லுமோ? சொன்மின். பட்டமரம் பாலையில் தளிர்க்குமோ? இதனை வள்ளுவனுரும்,

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று" என்று கூறு நிற்கின்றுர். ஆகவே, மனித வாழ்வுக்கு, உயர்வுக்கு ஒற்றுமைக்கு அன்பு இன்றியமையாத் தன்மையது என்பது நன்கு விளங்கற்பாற்று.

இத்துணை இன்றியமையாத் தன்மையுடைத்தான அன்பை மனிதன் பாரில் பல்வேறு வழியினிற் பெற்று நிற்றல் காண்பீர்.

"பத்துத்திங்களெம்மை பவிசாய்த் தாங்கிவைத்து
சத்துக்கெட்டுஉடற் சாற்றையெமக்களித்து
குத்தும் கொடும்வலியும் குறைவின்றிப்பெற்று
கத்தும்பொழுதெல்லாம் கனிவாய்ப்பால்தந்து
தத்திவிழுந்திடவே தாவிஅணைத்தெடுத்து
சித்தம் களிகொள்ளும் அன்னையின் அன்பு.

கண்ணில் கவியெழுதி காதற்சுவையளித்து
விண்ணில் வெண்மதியம் வீசும் ஒளியதனை
மின்னல் சிரிப்பதனில் மெதுவாய் மேயவிட்டு
கன்னல் மொழியாலே கருத்தைச் சிறையெடுத்து
மண்ணில் வாழ்வுக்கே மாளாச்சுவைகொடுக்கும்
மங்கை நல்லாளின் அன்பு, நல்லன்பு.

இன்னும் உடன்பிறந்தாரன்பு, உறவினரன்பு, நண்பரின் அன்பு, நல்லோரின் அன்பு. இவ்வாறு எத்தனையோ வழிகளில் மனிதன் அன்பைப் பற்றியிருப்பினும் அனைத்திலும் உயர்வாகக் கருதப்படுவது தாயன்பே என்பது அனைவருக்கும் ஒப்ப முடிந்த முடிவே. மணிவாசகம் படைத்த மாணிக்கவாசகனும் தம் திருவாசகத்தின்கண் இறைவனை வேண்டுகையில் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்று வேண்டா நிற்கின்றுர். இதனின்று தாயைவிட அன்பு காட்டுபவர் மனிதரில் வேறெவருமன்று என்பது பெறப்படுகின்றது தாயன்பைப்பற்றி ஓர் தமிழறிஞர் பின்வருமாறு கூறுகின்றுர்.

"தாயின்றன்மை எக்குற்றத்தையும் பொறுக்கும் இயல்புடையதாம். பிள்ளையை வெறுக்கும் குணம் தந்தைக்கு வந்தாலும், தாய்க்கு வாராதாம். தன் பிள்ளையைத் திருடன் என்று பிறர் கூறக் கேட்டாலும், நம்பாளாம். திருட்டுப் பிள்ளைகளோடு சேர்ந்தே போயிருப்பான் என்றே எண்ணுவாளாம். பொதுமகளிர் வீட்டுக்குச் சென்றுனெனக் கேட்டாலும் நம்பாளாம். வீதியில் பிற பிள்ளைகள் அவனைத் தவறுன வழியில் அழைத்துச் சென்றிருப்பர் விரைவில் திருந்திவிடுவான் என்றே எண்ணுவாளாம். கொலைகாரனெனக் கேட்டாலும், ஒப்பாளாம். ஆத்திரத்தால் நேர்ந்திருக்குமோவென ஐயப்பட்டு, அவனை விட்டுவிடுங்கள் எனப் படபடத்துத் தன் மகனை உயிரோடு திரும்பப் பெற ஓடியோடி, அலைந்து அலைந்து உருக்குலைவாளாம்.

தான் பெற்றமகன் சூதாடுவதற்குத்தான் பொருள் கேட்கின்றுன் என்பதைத் தாய் அறிவாளாம்; என்றுலும், புத்திசொல்லித்

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அவன் மாறிவிட்டான்

("அமிர்தநதி தேவா")

செக்கச் செவேலென செங்கட்டி நிறத்திலிருந்த வானம், சூரியன் தன் தொழிலை முடித்துக்கொண்டு வீடு செல்லும் மாலை நேரம் என்பதைக் காட்டிக்கொண்டிருந்தது.

அவ்வேளை :–

மட்டுநகர் பாலத்துக் கம்பிகளில் மகாராஜாக்கள் போல் விற்றிருக்கும் ஆடவர்களையும் பொருட்படுத்தாது நன்ருகக் குடித்துவிட்டு தள்ளாடியபடி பாலத்தைக் கடந்து மத்திய வீதியில் புனித மிக்கேல் கல்லூரியை எதிர் நோக்கி நடந்து கொண்டிருந்தான் அருள்தாஸ்.

எண்ணமென்னும் அலைகளை எங்கெங்கோவெல்லாம் எதுவித கட்டுப்பாடுமின்றி சுழலவிட்டுச்செல்லும் அருள்தாஸ் மத்திய வீதியால் வந்து கொண்டிருந்த கார், லொறி, மாட்டுவண்டி போன்ற எதையும் பொருட்படுத்தாது முன்னேறிக்கொண்டிருந்தான். மூக்கு முட்டக் குடித்திருந்த அருள்தாஸ் மதியிழந்து, சுய நினைவிழந்து தள்ளாடிய படி சென்றுகொண்டிருந்தான். அவனை இயற்கையென்னும் இளையகன்னி பலவகையில் அவன் கவனத்தை திசைதிருப்பப் பாடுபட்டாள். அவன் இயற்கையை கவனித்தால்தானே! அன்றி இயற்கையென்னும் இன்ப ஊற்றை அனுபவித்தால்தானே! தன் மனமென்னும் மாளிகையில் மதுவென்னும் அரக்கனை ராஜாவாக வீற்றிருக்கச் செய்தவாறு ''கணேசன் ஸ்ரோரஸை''யும் கடந்துகொண்டிருந்தான். இயற்கை அவனிடம் தோற்றுவிட்டாள். ஏன், அருள்தாசின் மனைவி மேரிகூட அவனிடம் தோற்றுப்போய் விட்டாள்.

★ ★ ★

திருமணம் செய்து பத்து வருடங்கள் வரை அருள்தாசும் மேரியும் குடித்தனமாக சண்டை சச்சரவின்றி வாழ்ந்து வந்தனர். அதன் பின்னர்தான் அருள்தாஸ் குடிப்பழக்கத்தைக் கைக்கொண்டான். ஆரம்பத்தில் சிறிதளவே குடித்துவந்தவன் நாளுக்குநாள் வேலையிலிருந்து திரும்பும் போது போத்தல் கணக்காய் குடித்து வந்தான். இப்படிக் குடித்ததன் பலனுய் ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலையும், அங்கு வீற்றிருக்கும் உலக மீட்பராம் ஆண்டவரையும் மறந்தான். கோயிலில் பூசை நடந்து கொண்டிருக்கும் போது அருள்தாஸ் தன் வீட்டில் மேரியையும் கோயிலுக்குச் செல்லவிடாமல் ''போர்ப் பூசை'' நடாத்திக்கொண்டிருப்பான். எப்படியும் மேரி அவனிடம் இருந்து தப்பி உலக மீட்பரிடம் சரணடைந்து விடுவாள். திவ்விய பலிப்பூசையின் போது இயேசுவிடம் உருக்கமாக மன்ருடுவாள் மேரி. தவருது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் தேவநற்கருணை பெறுவாள். தன்னையே இயேசுவிற்கு அர்ப்பணித்து தன் கணவனுக்காகவும், தனக்காகவும் மன்ருடுவாள். அருள்தாஸ் மனம் திரும்பி கெட்ட பழக்கங்களையெல்லாம் விட்டு விட்டு நல்ல கிறீஸ்தவனுக வாழவேண்டுமென பயபக்தியுடன் இரந்து கேட்பாள். என்ருவது ஒரு நாள் அவனை மனம்திருப்ப கடவுள் உதவி செய்வார் என முழு மனதுடன் நம்பினுள். ஒருநாள் அவன் குடியை விட்டு நல்லவனுவான் என மனதார நம்பினுள்.

இதை பிரதிபலிக்கும் முகமாகவே அன்று அந்நிகழ்ச்சி நடைபெற்றது.

★ ★ ★

மனம் போன போக்கில் வந்துகொண்டிருக்கிறுன் அருள்தாஸ். மத்திய வீதிவழியே கத்தோலிக்க அச்சகத்தையும் தாண்டி தள்ளாடியபடி வந்து கொண்டிருந்தான். மது மயக்கத்தால் தலை சுழன்றது. ஆனுலும் அவன் கால்கள் முன்னேறிக்கொண்டிருந்தன. வழமைக்கு மாருக அன்று அவன் கால்கள் மத்திய வீதியிலிருந்து பிரிந்து மாதாங் கோயில் வளவுக்குள் நுழைந்தன. கோயில் முன்றலில் இருக்கும் சிலுவை மரத்திற்கு எதிரே வந்தவன் ஒருகணம் திகைத்தான். காரணம்: அவன் மனம் குடிபோதையிலிருந்தாலும் உலக மீட்பரின் சொரூபத்தைக் கண்டதும் பயத்தால் நடுங்கியது. என்னவாயிருந்தாலும் அவனும் ஞானஸ்நானம் பெற்ற ஒரு கிறீஸ்தவன்தானே! அவ்வேளைதான் சூரியனின் ஒளி பிரகாசமாய் அவன் முகத்தில் விழுந்தது. மறுகணம் மயங்கியவாறு துவண்டு

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தாழ்ச்சியே பலத்தின் அறிகுறி

## (ஒரு துறவி)

பலமுள்ளவன் யார்? தாழ்ச்சியுள்ள மனிதனே நிச்சயமாக சக்திவாய்ந்தவன். ஏன்? ஏனெனில் காண்பவை, காணுதவையாகிய யாவையும் படைத்த தேவனே அவனுடைய சக்தியின் ஊற்ருய் இருக்கின்ருர். தாழ்ச்சியுள்ள மனிதன் கடவுளை அவர் இருக்கும் இயல்பின்படியே ஒப்புக்கொள்கிருன். தேவன் தன்னை எவ்வாறு காண்கின்ருரோ, அத்தெய்வீக ஒளியினில் தன்னை ஊடுருவிக் காண்கின்ருன். அதாவது, தேவனே அவன் உள்ளத்தை அறிந்து தீர்ப்பிடும் நீதி அரசராய் இருக்கின்ருர். அவரே அவனை விடுதலை செய்பவர். அவரே அவனுடைய வீட்டைக் கட்டுபவரும் பாதுகாப்பவருமாய் இருக்கின்ருர். பசும்புற் தரைகளிலே அவனை மேய்க்கின்ற ஆயரும், இருளின் பள்ளத்தாக்கிலே அவனை நடாத்திச்செல்லும் மெய்க்காப்பாளனும் ஆண்டவரே. அவனுக்கு மகிமையின் கிரீடத்தை அளிப்பவரும், அவன் இதயத்தை ஆனந்தத்தால் நிரப்புபவரும் ஆண்டவரே. தாழ்ச்சியுள்ள மனிதனின் வல்லமையானது மனுஷீக அல்லது அவனுடைய சொந்த சாதனங்களிலும் செல்வங்களிலும் ஊன்றி நிற்பதல்ல. பதவி, பணம், செல்வாக்கு ஆகியவற்ருல் அவன் பலவானுவதில்லை. உண்மையில் அவனுடைய உடைகளாலும், உடமைகளாலும் அவன் வலிமை பெறுவதில்லை. மனுஷீக புத்திக்கூர்மையின் தந்திரத்தினுலன்றி தெய்வீக மெய்ஞ்ஞானத்தினுல் தாழ்ச்சியுள்ளவனின் சிந்தனையும், சித்தமும் சக்தி வாய்ந்ததாகின்றன.

தாழ்ச்சியானது மெய்மையை ஒப்புக்கொண்டு, பொய்மையை எதிர்த்து வீரியமாய்ப் போராடுகின்றது. மனந்திரும்பிய மதலேனுள், சக்கேயுஸ், புறவினத்தானுன நூற்றுவர் தலைவன், நல்ல கள்வன் ஆகியோர் செய்தவாறு, தனது உண்மையான நிலைபரத்தை இறையருளுக்குத் திறந்துகாட்டி தேவ வல்லபம் விளங்கும்படியான சூழ்நிலையை உருவாக்குகின்றது. இரக்கமும், அருளும் பெறத்தக்க ஆக விசாலமுள்ள பாத்திரம் இப்புண்ணியம். தேவனின் கொடைகளைப் பெறவும் அவற்றைப் பகிர்ந்து வழங்கவும் வழிவகுப்பதும் இதுவே. ஏராளமாய் இறைவனின் கருணை மழை பொழிந்து மனந்திரும்புதலை அதிகரிக்கப்பண்ணும் செழிப்பான மண் தாழ்ச்சியே. ஆண்டவன்பால் மனிதனை உயர்த்தும் ஏணி இப்புண்ணியம் என்று கிறீஸ்து தெளிவாகப் போதித்திருக்கிருர். தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். கடைசி இடத்தைத் தேடுகிறவனுக்கு முதலிடம் கொடுக்கப்படும். சிறு குழந்தையைப் போலாகாவிட்டால், பரலோக இராட்சியத்திற்குள் பிரவேசிக்கமுடியாது. தாழ்ந்தவர்களை இறைவன் உயர்த்தினுர் என்று கிறீஸ்துவின் மாதாவும் மொழிந்தனள். இப் புண்ணியம் நிறைந்த புனிதை மரியன்னையை இன்றும் ''ஆசீர்வதிக்கப்பட்டவளே வாழ்க!'' என்று விசுவசிப்போர் போற்றுகின்றனர். மெசியாவின் முன்னேடியான அருளப்பருடைய ஆன்மீக வாழ்வின் அடிப்படை ''அவர் வளரவும் நான் குறுகவும் வேண்டும்'' என்ற குறிக்கோளில் அடங்கியுள்ளது. தேவகுமாரனுடைய பாத அணிகளின் வாரை முதலாய் அவிழ்க்க தாம் தகுதியற்றவர் என்று அருளப்பர் கருதினுர். அவ்விதமான தாழ்ச்சிச் சிந்தனையில் தவக்காலம் ஆரம்பமாகிறது: ''மனிதா, நீ மண்ணுயிருக்கிருய் மீண்டும் மண்ணுய்ப் போவாய்'' அல்லது ''மனிதா நீ தூசியிலிருந்து புறப்பட்டவன் மீண்டும் தூசிக்குத் திரும்புவாய்''. தவக்காலத்தின் உட்கருத்து தாழ்ச்சியே. தவக்காலமெனும் பரந்த காட்சியை அலங்கரிப்பது சிலுவையன்ருே. ஆம், இச்சிலுவை தாழ்ச்சியின் உறுதியான சின்னமே.

தாழ்ச்சி உறுதியுடையவனின் உள்ளத்தில் உறைகின்றது. சிப்பிக்குள் முத்துப்போன்று அவன் இதயத்தில் இப்புண்ணியம் வளர்கின்றது. பரலோக செல்வங்களை வாங்குகின்ற விலையேறப்பெற்ற முத்து தாழ்மையே. சாந்தமும், தாழ்மையும் தம் இதய பண்புகள் என்று கிறீஸ்து உறுதியாயுரைத்தார். இவற்றை ''என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்'' என்ருர். தம் போதனையை சாதித்தார். சீஷர்களின் கால்களை தம் திருக்கரங்களால் சுத்தம்பண்ணவும் அவர் தயங்கினவரல்லர். தமது கொலைஞர்முன் மௌனம் சாதித்த உத்தம செம்மறி அவர். இராசத் துரோகி,

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தாழ்ச்சியே ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தேவனைத் தூஷணித்தவன் என்ற குற்றச் சாட்டுகளை அவர்மீது சுமத்தி, சமுதாயத்தில் கடைகெட்டவனுக எண்ணி: ''அவனை சிலுவையிலறையும்'' ''அவனை சிலுவையிலறையும்'' என்று இரத்த வெறிபிடித்த ஓநாய்கள் போன்று கதறினுர்கள் ஆண்டவரின் சதித்துரோகிகள். அவருடைய உதிரத்தை உறிஞ்ச தாகத்தால் தவித்தார்களே அப்பாவிகள். ஆனுல், ஆண்டவரோ அவர்களின் ஆன்மீக மீட்பில் தாகத்தின்மேல் தாகமாயிருந்தார். வரண்ட உதடுகளில் ''அவர்களை மன்னித்தருளும்'' என்ற பிரமிக்கப்பண்ணும் சொற்கள் மென்மையாகவும், உறுதியாகவும் தவழ்ந்தன. மனமுவந்து மன்னிப்பது தாழ்மையின் கனியேதான். கடவுளோடு கடவுளான இறைமகன் இயேசுக்கிறீஸ்து எல்லையில்லாத் தாழ்வு நிலைக்கு தம்மை தாமே கையளித்தார்.

பிசாசையும் அதன் தீய சக்திகளையும் அவர் தோற்கடித்தார். பதவி மகிமையினுலும், அதிகார சின்னங்களாலும், பணத்தினுலும், பணக்காரத் தோற்றத்தினுலும், அரசியல் தந்திரம், இலௌகீக செல்வாக்கினுலும் அல்ல, ஆனுல் தாழ்மை என்னும் கருவியினுல் தமது வல்லபத்தைக் காட்டி வெற்றிவீரரானுர். இருளின் சக்தி எதிர்த்து வெல்லமுடியாத ஆயுதம்: ஆண்டவரின் தாழ்மையே. கல்வாரியின்மீது சிலுவையின் சக்தி ஒளிர, அதன் இருள்செறிந்த பின்னடிவாரத்தில் அலகையும் அவ்வஞ்சகனின் அடிவருடிகளும் பதுங்கிப் பதுங்கி நழுவிவிட்டன. இருளால் ஒளியை சகிக்கமுடியவில்லை. கிறீஸ்துவின் ஒளி அலகையின் கண்களை குருடாக்கியது. தாழ்மையின் உயிர்வடிவான கிறீஸ்து உயிர்த்தெழுந்தபோது சாத்தான் அகங்கார ஆசனத்திலிருந்து மின்னலைப்போல வீழ்ந்தான் என்பது உண்மையன்றோ.

தாழ்மை பலம். அதுவே வெற்றி. உண்மைத் தாழ்ச்சி இதயத்தில் உதிக்கின்றது. அது அன்பிற் தோன்றி, அருளிலும், தயையிலும் அதிகரிக்கின்றது. தேவன் அன்பு. அவ் அன்பில்லாமல், அவர் அருளில்லாமல், அவர் தயை இல்லாமல் தாழ்ச்சி வளராது. தாழ்மையில்லையெனில் மாசின்மையில்லை. தாழ்மையில்லையெனில் மனந்திரும்புதலுமில்லை.

தெய்வீக அன்பின் தெய்வீகத் தாழ்ச்சி இல்லாவிட்டால் தேவ வார்த்தையானவர் மனித அவதாரம் பண்ணியிருக்கவே முடியாது. மனுக்குலத்தின் மீட்புக்கு கிறீஸ்துவின் தாழ்மை அவசியமாயிருந்ததுபோல, அவருடைய மீட்பு வேலையின் கனிகளை நமது ஆன்மாவுக்கும் நம் சகோதரர் ஆன்மாக்களுக்கும் பலனுள்ளவைகளாக்குவதற்கு நம் ஒவ்வொருவரின் தாழ்மை அவசியமன்றோ.

எனவே உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் பலம், வெற்றி என்னும் சக்திகளின் இரகசியமானது தாழ்ச்சி என்ற பதத்தின் உட்கருத்தினில் மறைந்திருக்கின்றது.

''தாழ்மை பலத்தின் நிச்சயமான அறிகுறி'' என்பது தோமஸ் மேட்டன் என்ற ஆன்மீக ஞானியின் கூற்றுகும். ❀

## அவன் ...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

விழுந்தான். அவ்வேளை அவன் மனமென்னும் திரையில் பல நூறு வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி நிழற்படமாய் ஓடிக்கொண்டிருந்தது.

''கிறீஸ்தவர்களுக்கு முழு எதிரியாய் நின்று அவர்களைப் பூண்டோடு அழிக்க சபதமிட்டானும் ஒரு போர்வீரன். அவன் பெயர் சவுல். அவனை ஆண்டவர் தண்டிக்க விரும்பினுர். அதோடு அவனை மனம் திரும்பவும் செய்தார். போர்க் கோலம் பூண்டு இறை மக்களை அழிக்கச் சென்றுகொண்டிருந்த அவ் வீரனுக்கு பிரகாசமான ஒளியொன்றைப் பாய்ச்சி அவன் கண்களை குருடாக்கினுர். அவனது விம்மியெழுந்த தோள்களும், உரம் பெற்ற மார்பும் ஆண்டவனுக்கு அஞ்சி நடுங்கி அடிபணிந்தன.

மனத்திரையில் படக்காட்சி முடிந்து சில நிமிடங்களின் பின்னர் கண் விழித்த அருள்தாஸ், சவுலுக்குச் செய்ததுபோல் தனக்கும் ஆண்டவர் செய்வார் என அஞ்சினுன். அக்கணமே தவக்காலம் தொடங்கியிருப்பது அவன் மனதில் மட்டது.

மறுகணம், தனது மனதில் மதுவை விரட்டியடித்துவிட்டு அதை கடவுளுக்குத் திறந்துவிட்டான். அது எப்போதும் மீட்பருக்காகவே திறந்திருக்க வேண்டுமென உறுதி பூண்டான். அவ்வேளை கோயில் மணி மூன்று முறை ஒலித்து ஓய்ந்தது. அம்மணியோசை மேரிக்கு வெற்றி என்பதை மறைவின்றி அறிவிப்பதுபோல் இருந்தது. அவ்வேளை புது மனிதனுய், புதுப்பொலிவுடன், கோவிலுக்குள் சென்ற அருள்தாசை மாதாங்கோயில் முன் வாசலை ''ஆ''வென்று விரித்து நின்று ''வா'' வென வரவேற்பதுபோல் இருந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உமக்கும் தாகமோ...?

அ. பி. றஞ்சன் குருஸ்,

புனித திரேசாள் தேவாலயம்,

**வாழைச்சேனை.**

**வா**ழ்க்கை என்பது, பளிங்குக் கற்களால் உருவாக்கப்பட்ட மாளிகையல்ல, மேடு பள்ளங்கள் நிறைந்த பயங்கரகாட்டுப்பாதை. இங்கே பொறாமை, வஞ்சகம், சூது போன்ற கொடிய மிருகங்கள் நடமாடும். ஒவ்வொரு மனிதனும் விழிப்புடன் இருந்தாற்றான், வெற்றியுடன் முன்னேறலாம். அப்பேர்ப்பட்ட வாழ்கையில், ஓர் எடுத்துக்காட்டாக எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்தைத் தவிர்த்து, இப்படித்தான் வாழவேண்டும் என்று கூறிப்புகுந்தார் நம் நாயகனும் நல்லாயன் இயேசுகிறிஸ்து.

கொடியவர்களின் கோள் குண்டணிகளுக்கு இலக்காகிச் சிலுவை மரத்தில் மூன்றாணிகளால் தொங்கிக் கொண்டிருந்த இறைமகன் இயேசு, தாம் மரணிக்க முன்பு செப்பிய ஏழு திருவாக்கியங்களுள், நான்காவதாகக் கூறிய வாக்கியம் **''நான் தாகமாயிருக்கிறேன்''** என்பதாகும்.

''நல்ல இரசத்தை வைத்துக்கொண்டு கீழ்த்தரமான இரசத்தைத் தந்து விட்டீர்களே'' என்று குறை கூறிய கலியாணகாரர்களுக்கு நீரளிக்கும் பதில் 'நான் தாகமாயிருக்கிறேன்' என்பதோ? ''இது என் இரத்தம். இதனைப் பருகுங்கள்'' என்று சீடர்களுக்கு உம் கையாலேயே கொடுத்து அருந்தச் செய்த உமக்கு இப்போ தாகமோ? ''திருச்சட்டத்தை அழிக்கவல்ல நிறைவேற்றவே வந்தேன்'' என்றியம்பிய உலகின் ஒளியே உமக்கு இந்நேரம்தானா தாகமெடுக்க வேண்டும்!

ஜெத்செமனித் தோட்டத்தில் இரத்த வியர்வை நிலத்தில் சிந்த பரலோக பிதாவிடம் கண்ணீருங் கம்பலையுமாகத் தெண்டனிட்டு, எங்களுக்காக வேண்டிக்கொண்ட போதும், கற்றூணில் கட்டுண்டு கசையடிபட்டு நிஷ்டூர கொடுமைகள் அனுபவித்த போதும், உண்டாகாததாகம், நீர்ச்சுனைகளும், வீடுகளும் அற்ற இந்தக் கபால மலையின் உச்சியிலே மரணிக்கும் தருவாயில்த்தானா ஏற்பட்டது! சீவியத்தின் ஊற்றாகிய உமக்கு, நீர் ஆகாயத்தில் வைத்த தண்ணீர்த் தேக்கங்களிலும், பூமியில் உண்டாக்கின சாகரங்களிலுமோர் துளியாவது தாகத்தைத் தணிக்க வரவில்லையே!

ஆனால், இங்கு எம் ஆண்டவருக்கு ஏற்பட்ட தாகம் தண்ணீர்த்தாகமல்ல நம் பாவக்கறையைத் துடைக்கப் பாரில் அவதரித்த மனுவேலனுக்கு நம்மீது கொண்ட பாசத்தின் பிரதிபிம்பமே தாகமாகத் தவித்தது.

எங்களாத்தும ஈடேற்றத்துக்காகக் கஸ்தி வாதைகள் பலவற்றை, எண்ணிலடங்காமல் அனுபவித்து, அதுவும் போதாமல் இன்னமும் பாடுபட வேண்டும் என்ற தணியாத தாகமே அவருக்கு ஏற்பட்டது. அவருடைய மரணத்தின் பெறுபேறுகளை அநேகம்பேர் அடைய வேண்டும் என்கிற ஆசையும், ஆன்மாக்கள் நரகத்திலே விழாமல் கரையேற வேண்டுமென்று தவித்த ஆசைத் தாகமேயன்றி, வேறெந்தத் தாகமும் ஏற்படவில்லை.

எனவே, நாமும் அவருடைய இந்தத் தணியாத தாகத்தைப் பகற்கனவாக்காமல், இறையன்பை அறியமுடியாமல் தடுக்கும் சாத்தானின் திரைச்சீலையை, நம் மனதின்கண் வேரோடு களைந்து, அவர் பட்ட பாடுகளை நினைவில்த் தியானித்து, அவரை நேசித்துச், சேவித்து, அவரிட்ட பணிகளை நிறைவேற்றச் சித்தமாவோமாக.

**உண்மை அழிந்தால் எதுவும் வாழ்வதில்லை;**
**உண்மை வாழ்ந்தால் எதுவும் அழிவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காமல் சபைக் கன்னியரின் பொன் விழா

ஆதவன் கிழக்கில் உதித்தல் போல் அப்போஸ்தலிக்க காமல் சபையும் ஈழத்தின் கிழக்கில் உதித்தது. நாலு சகோதரிகளுடன் தொடங்கிய சபை இன்று இருபத்திமூன்று கதிர்களை ஈழத்திற் பரப்பி, ஈழ மண்ணின் கன்னியரை இருநூற்றி ஐம்பதுக்கு மேற் கொண்டு, தலைமைப் பீடத்தையும் தாமே தாங்கி நடத்தி வருகின்றது. நவசந்நியாச நிலையத்தையும் தற்போது தாங்கியுள்ளது.

புராணத்திற் புகழுடன் போற்றிப் பாடப் பட்டுள்ள திருமலையாம் நன்மலையில் இன்று 5-2-1972ல் தனது பொன்விழாவைப் புகழுடன் கொண்டாடிக்கொண்டிருக்கிறது புனித வளனுர் இல்லம். திருமலையிற் தொண்டாற்றிய இயேசுசபைக் குருக்கள் மங்களூர் சென்று நாலு கன்னியரை இறை சேவை செய்ய வரும்படி அழைத்து வந்தனர் அவர்கள் அன்னை லுவேட்ஸ் இறைவனடி அடைந்து விட்டார். சகோதரி கிறசென்ஸ் மட்டக்களப்பிலும், சகோதரி கிளேர் கொள்ளுப்பிட்டியிலும், சகோதரி யுஸ்ரீன் திருமலையிலும் இன்னும் இறைவன் புகழுக்காக அயராது செபத்தாலும் தபத்தாலும் சேவை செய்து வருகின்றனர் என்பதைப் பெருமையுடன் அறியத் தருகிறோம்.

இப்பொன்னுளாம் புனித நாளில், திருமலை புனித மரியாள் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவிகள், சபைச் சகோதரிகள், பழைய மாணவர், மாணவிகள், பெற்றோர், அன்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் ஒன்று கூடினர். சபையின் தலைமைப் பீடத்தை ஆண்டு நடத்தும் சகோதரி மோட் அன்று காத்திராப் பிரகாரம் வருகை தந்திருந்தார்கள். மு. ப. 7 மணி, புனித மரியாள் கல்லூரியின் பழைய மாணவனும், திருமலை புனித மரியாள் மகா தேவாலயத்தின் பங்குத் தந்தையுமாகிய வண. வாம்பேக் அடிகளார் பலிபூசை ஒப்புக்கொடுத்தார். பலிப்பூசைக்கு பொன்விழாவைச் சிறப்பிக்க ஐம்பது எண்ணெய் விளக்குகள், மத வேறுபாடின்றி பழைய மாணவர், மாணவிகள் ஆசிரியர்கள், மாணவிகள், சகோதரிகளால் பவனியில் எடுத்துச் செல்லப்பட்டு ஒப்புக் கொடுக்கப்பட்டன. பலிமுடிவில் தேனீர் விருந்துண்டு யூபிலிக் கொண்டாட்டம் இனிது முடிவெய்தியது.

ஈழத்தில் எமது பாடசாலைகளிற் கல்வி பயின்ற மாணவ மாணவிகளே, பெற்றோரே, அன்பர்களே, ஆதரவாளர்களே, ஆசிரியர் பெருமக்களே, அப்போஸ்தொலிக்க காமல் சகோதரிகளின் பெற்றோரே உறவினரே எம்முடன் இறைவனுக்கு நன்றி கூறுங்கள். தவிர்க்க முடியாத காரணங்களினுல் இப் பொன்விழாவை 5–2–72ல் ஆடம்பரமாகக் கொண்டாட முடியவில்லை. ஆயினும் ஆடித் திங்கள் 22ம் 23ம் திகதிகளில் மிகவும் சிறப்பாக 23 இல்லங்களும் சேர்ந்து திருமலையில் கொண்டாட இருக்கின்றன என்பதையும் அறியத் தருகின்றோம்.

இறைவனுக்கு நன்றி!

சகோதரி மேரி பிடலீனு அ. கா.

வெளிவந்துவிட்டது!

குழந்தைகளின் ஞானஸ்நானத் திருச்சடங்கு

(விசுவாசிகளின் கைநூல்)

விலை: 80 சதம். அஞ்சல் செலவு: 25 சதம்

கிடைக்குமிடம்:—

மறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருக்கள் அங்கிக்குப் பதிலாக வேறோர் அடையாளச் சின்னத்தை அணியலாமே!

கண்டி
20-2-72.

அன்புள்ள அண்ணாவுக்கு!

உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன். நன்றி. உங்கள் கடிதம் நான் அன்று அம்மா விடம் கூறமுடியாத சில கருத்துக்களை அலசி ஆராய துணைபுரிகிறது, என்று மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் அவளுக்கு சிந்தனைத்திறன் குறைவு என்பதால் நான் இன்னும் சில உண்மைகளை எடுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். தவறுகள் இருப்பின் தடையின்றிக் கூறுங்கள்.

அங்கிதரும் பெருமை கோடித் தங்கம் தரினும் வருமோ? என்று கூறுவது சிறந்த சொற்றொடராய் இருக்கிறதே அன்றி, அங்கு கருத்தின் ஆழத்தை காணமுடியவில்லை. உங்கள் முதற்கேள்வி கிறிஸ்துவுக்கு அடுத்தாற் போன்று சிறந்து விளங்கும் குருத்துவம், சில அங்கி அணியாத குருக்களால் உருக்குலைந்து போவதா என்பதே.

உங்கள் கேள்வியைப் பார்த்தால் குருத்துவத்திற்கும் அங்கிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப்போல் நீங்கள் பேசுவதாகத் தெரிகிறது. உண்மை அதுவா? இல்லை. கிறிஸ்து அன்று அப்போஸ்தலர்களைப் பார்த்து "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று கூறி அவர்களைக் குருக்களாக்கிய போது அவர்கள் இவ்வங்கி அணியவில்லை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். அன்று அவர்கள் மற்றைய மக்களைப் போன்று வாழ்ந்தார்கள். அதன்பின்னும் அவர்கள் சாதாரண உடை அணிந்தவராகிய மத்தியாசைத் தேர்ந்தெடுத்தார்கள். குருக்களாக அபிஷேகம் பண்ணப் பட்டவர்களும் சாதாரண உடை அணிந்தவர்களே. ஆகவே, மக்கள் அவர்களைக் குருக்களாக மதித்து அவர்களின் உடையினால் அல்ல. ஆனால் அவர்களின் அபிஷேகத்தால் என்பதை நீங்கள் உணர்வீர்கள் என நினைக்கிறேன்.

நான் இப்பொழுது திருச்சபையின் ஆதிகால சரித்திரம் படித்துக்கொண்டிருக்கிறேன். இதை இதன்படி பார்த்தால் குருமார் தற்சமயம் அணியும் அங்கி உரோமர்கள் ஆதி காலத்தில் அணிந்த ஒரு உடை என்பது தெளிவாகிறது. உயர் அந்தஸ்த்தில் இருந்த சில உரோமர்கள் டோகா (Toga) என்ற ஒரு பரந்த ஆடையையும் அணிந்தார்கள். அது திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்தின் போது குருவானவர் அணியும் பரந்த அங்கியைப் (Cope) போன்றது. ஆகவே இது குருக்களின் அங்கி அல்ல. ஆனால் திருச்சபை உரோமை நகரில் கால் வைத்த பின் உரோமை நாகரிகத்தை பின்பற்றியதால் எழுந்தது என்பதை உணர்வீர்கள். 1605இல் இந்தியா வந்தடைந்த ராபட் அடிகளார் குருத்துவ அங்கி திருமறை போதகத்திற்கு தகாது எனக்கண்டு அதைக் களைத்து காவி உடை அணிந்தார். அப்பொழுது கூட உங்களைப் போன்றவர்களும் திருச்சபையைப் பாதுகாப்பது தங்கள் கடமை என எண்ணிய சில குருக்களும் கூட அவரை ஏளனம் பண்ணி அவர் செயலைக் கண்டித்தனர். அவரைப் புதுமைப்பித்தன் என்று சரித்திரத்தில் வாசித்தேன். இதை ஏன் கூறுகிறேன் என்றால் இவைகள் திருமறை பரப்பும் அலுவலுக்குத் தடையாக இருந்தால் அவைகளைக் களைந்தெறிய வேண்டியது நமது கடமை.

சில குருக்கள் தங்கள் அங்கியைக் களற்றிக்கொண்டு நடமாடுவதால் "நான் ஒரு குருவானவர்" என்று கூறித்திரிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எழுதியிருந்தீர்கள். அதைக் கொண்டு பார்க்குமிடத்தில் அங்கி குரு என்று காட்டுவதற்கு உபயோகப்படும் ஓர் சின்னமே தவிர, அதுதான் ஒருவரைக் குருவானவர் ஆக்குவதில்லை என்பது தெளிவு.

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நம் ஆயரைப்பற்றிய செய்திகள்

நம் ஆயர் இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகை அவர்களும் அவரது பயணத் துணைவரும் செயலாளருமாகிய அருள்திரு திருஞான தீபன் சுவாமியாரும் முதலில் உரோமாபுரிக்குச் சென்று பரிசுத்த பாப்பரசரைப் பேட்டி கண்டு அவரது ஆசீரைப் பெற்றபின் மால்தா தீவுக்குச் சென்று, காலஞ்சென்ற பீற்றர் துரைரெத்தினம் அடிகளின் கல்லறையைத் தரிசித்து அவருக்காகப் பலிபூசை ஒப்புக் கொடுத்து, அவருடைய வருத்தத்தின் போதும் அவர் இறந்தபின்பும் அவருக்கு உதவி புரிந்த சகலருக்கும் மேற்றிராசனத்தின் பேரால் நன்றி கூறினார்கள். பின்பு ஆயர் அவர்கள் பிரான்சு, மேற்கு ஜேர்மனி முதலிய நாடுகளைத் தரிசித்தபின் அமெரிக்காவுக்குச் சென்று, சென் லுயில் என்ற பட்டணத்தில் துறவற கன்னியாயிருக்கும் தமது ஒரே சகோதரியோடு கிறிஸ்து பிறப்புத் திருநாளைக் கொண்டாடினார்.

இப்போது, மேற்றிராசனத்தின் கடன்களைத் தீர்க்கவும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யவும் இயன்ற அளவு நிதி திரட்டும் பொருட்டு, ஆயர் அவர்கள் வெவ்வேறு மேற்றிராசனங்களைத் தரிசித்து வருகிறார். அவர் நற்சுகத்துடன் இருந்து வருகிறார். அவரது முயற்சிகள் சித்தியடையும்படி இறைவனை வேண்டுவோம்.

---

## குருக்கள்...

[12ம் பக்கத் தொடர்ச்சி]

**ஆகவே, குருக்கள் அங்கிக்குப் பதிலாக வேறு ஓர் அடையாளச் சின்னத்தை அணிந்து கொண்டால் அது போதுமல்லவா?** உதாரணமாக குருக்களாகப் போகும் நாங்கள் அங்கிக்குப் பதில் ஒரு சிறு சிலுவையை அணிகிறோம். இதையே குருக்களும் அணிந்து அதன் கீழ் குரு என்ற எழுத்தைப் பதித்தால் நன்றாய் இருக்குமல்லவா!

அண்ணா, நான் படித்ததனால் தத்துவம் பேசுகிறேன் என்று நினைக்காமல் சற்று சிந்தித்துப் பாருங்கள். எங்கள் நாட்டில் அங்கியை துறவிகள் (Monks), சகோதரர்கள் (Lay Brothers), குருக்களுக்குப் படிக்கும் நாங்கள் (Seminarians), குருக்கள் (Priests), மேற்றிராணிமார் (Bishops) ஆகியோர் அணிகிறார்கள். உங்கள் கொள்கையின்படி "அங்கிக்குத்தான் மரியாதை" என்று சொன்னால் இவர்கள் எல்லோரும் ஒரேவிதமான மரியாதையைப் பெறவேண்டும். ஆனால், நாங்கள் வாழ்க்கையில் காண்பது இதற்கு நேர்மாறாக இருக்கிறது. இதில் இருந்து கிறிஸ்தவர்கள் அங்கிக்கு அல்ல அவர்கள் திருச்சபையில் வகிக்கும் பதவிக்குத்தான் மரியாதை கொடுக்கிறார்கள் என்பதை நான் கூறாமலே நீங்கள் உணர்வீர்கள். இந்த வணக்கத்தையும், மரியாதையையும் அவரவர் அந்தஸ்த்திற்க்குரிய விதத்தில் கொடுக்க உதவி அளிப்பது அவரவர் அணியும் வெளி அடையாளங்கள். ஆகவே, அங்கிக்குப் பதிலாக வேறு ஓர் அடையாளத்தை நம் குருக்கள் அணியலாம் என்பது தெளிவாகின்றது.

முடிவில் உங்கள் கூற்றுப்படி அங்கியைக் கொண்டுதான் ஒரு குருவானவர் மரியாதை பெறுகிறார் என்றால் காலை முதல் மாலை வரை அங்கியை அணிந்திருக்கும் சில குருக்களை நம் கிறிஸ்த்துவ மக்கள் "அவருக்கென்றால் எப்பொழுதும் பணப் பயித்தியம்" என்றும் "அவருக்கு போத்தல் என்றால் போதும்" என்றும் பல மாதிரியும் பேசுகிறார்களே. காலை முதல் மாலை வரை அங்கியை அணிந்திருக்கும் இவர்களுக்குள் சிலரை மக்கள் மதிக்க அங்கியல்ல முற்காரணம், ஆனால் கிறிஸ்துவின் போதனையைப் பின்பற்றி நடத்தல் என்பதே என் கருத்து. இதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களோ என்னமோ தெரியாது.

நான் கூறவேண்டிய கருத்துக்கள் சிலவற்றைக் கூறியுள்ளேன். இதில் தவறுகள் இருப்பின் தயங்காது எடுத்துக் கூறுங்கள். நாளை நீங்கள் என்னை 'தந்தையே' என்று அழைப்பதாயிருந்தாலும், இன்றும், என்றும் நான் உங்கள் தம்பி என்பதை நான் மறக்கவில்லை அண்ணா. அம்மா, தங்கை, எல்லோருக்கும் நான் சுகம் சொன்னதாய்ச் சொல்லுங்கள்.

வணக்கம்.

இங்ஙனம்
உங்கள் அன்புள்ள தம்பி
**தேவநேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

**அலகு 8: ஞானஸ்நானம்**

**பாடம். 28: கடவுளை நாடிப்போதல்**

இப்பாடம் க. தி. வி. 61ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. மக்கள் மனந்திரும்பி வரும்படி கடவுள் நற்செய்தியைப் போதிக்க திருச்சபைக்குக் கட்டளையளித்தார், மக்களின் புத்திக்குத் தெளிவைக் கொடுத்தார், மெய்யான கடவுளை அறியும்படி அவர்கள் கண்களைத் திறந்தார்.

2. மனந்திரும்பி வருபவன், தான் முன் வழிபட்ட தெய்வங்களையும், சிலைகளையும், தப்பறைகளையும், பாவங்களையும், விட்டு நீங்குகிறான். தன் விண்ணகத் தந்தையைத் தன் முழுமனதுடன் நாடிவருகிறான்.

3. இந்த மனந்திரும்புதல் ஞானஸ்நானத்தினால் முற்றுப் பெறுகின்றது.

**பயிற்சிகள்:**

1. நற்செய்தியைப் போதிக்குமாறு கடவுள் .................................. கட்டளையளித்தார்.

2. ''விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் .............................. அடைவான்.''

3. நாம் கடவுளின் அரசில் ....... ............ வாழ உண்டாக்கப்பட்டிருக்கிறோம்.

4. விக்கிரகங்களை.......................... தவறு

5. ............................பெற்ற ஒவ்வொருவரும், கடவுளின் மக்கள் என்பதற்கு ஏற்ப வாழ்க்கை நடத்துதல் வேண்டும்.

---

**பாடம் 29: ஞானஸ்நானம் புதிய வாழ்வின் ஊற்று.**

இப்பாடம் க. தி. வி. 63ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. ஞானஸ்நானத்தால் கடவுளின் பிள்ளைகளாகின்றோம்.

2. ஞானஸ்நானத்தால் ஒரு புதிய வாழ்வைத் தொடங்குவதால் அதைப் ''புதுப்பிறப்பின் தேவதிரவிய அனுமானம்'' என அழைக்கிறோம்.

3. ஞானஸ்நானத்தில் பிதா, சுதன், பரிசுத்தஆவி, நம்மில் தங்கி வாழ்வதற்காக வருகின்றார்கள்.

4. ஞானஸ்நானத்தில் நமக்கு அளிக்கப்படும் ஆற்றல்கள் விசுவாசம், நம்பிக்கை பரம அன்பு.

5. ஞானஸ்நானத்தில் கிறிஸ்துநாதர் நமது ஆன்மாவில் ஒரு பொழுதும் அழியாத ஞானமுத்திரையை பதிக்கிறபடியால் அதை ஒரு முறை மட்டும்தான் பெறலாம்.

6. நாம் ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவின் சீடர்களின் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம்.

7. குழந்தைகளுக்கு விரைவில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமென்பது திருச்சபையின் கட்டளை.

**பயிற்சிகள்:**

சரியாயின் சரி என்றும், பிழையாயின் பிழை என்றும் கூறுக.

1. மறுபிறப்பு என்பது இறப்பு என்று அர்த்தம்.

2. ஞானஸ்நானத்தால் சென்மபாவம் நீக்கப்படுகிறது.

3. இயேசுநாதர் நமது பாவங்களுக்கு பரிகாரம் செய்ய தமது உயிரைக் கொடுத்தார்.

4. ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவி மட்டும் நம்மிடம் வாழ வருகின்றார்.

5. விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு கடவுளைச் சார்ந்த புண்ணியங்களாகும்.

6. இரட்சணியம் அடைய ஞானஸ்நானம் அவசியமில்லை.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

**அலகு 9: ஞானஸ்நானம் பெற்றவனின் வாழ்வு.**

**பாடம் 30: விசுவாசம்**

இப்பாடம் க. தி. வி. 64ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. கடவுள் சிறந்த முறையில் தமது திருமகன் இயேசுகிறிஸ்துநாதரின் வழியாக தம்மை வெளிப்படுத்தியுள்ளார்.

2. கடவுளுடைய நாலுவித ஞானம் திருச்சபை வழியாக தெரியப்படுவதால், திருச்சபை கற்பிக்கும் அனைத்தையும் நாம் விசுவசிக்க வேண்டும்.

3. கடவுளுடைய அருளின்றி நாம் ஒன்றையும் விசுவசிக்க முடியாது. கடவுளுடைய அருளைப் பெற அடிக்கடி மன்றாடவேண்டும்.

4. இப்பொழுது நாம் விசுவசிப்பதை நாம் மோட்ச வீட்டிலிருக்கும்போது நேரடியாகப் பார்ப்போம்.

**பயிற்சிகள்:**

பொருத்தமானதை தேர்ந்தெழுதுக

1. கடவுள் வெளிப்படுத்தியதை
2. கடவுளின் அருளின்றி
3. கடவுள் தம்மை வெளிப்படுத்தியது
4. கடவுளின் நாலுவித ஞானம்
5. கடவுளின் நன்கொடையாய் இருப்பது

---

1. திருச்சபை வழியாக தெரியப்படுகிறது.
2. விசுவாசம்.
3. நாம் ஒன்றையும் விசுவசிக்கமுடியாது.
4. இயேசுநாதர் வழியாக.
5. விசுவசிக்க வேண்டும்.

---

**பாடம் 31 விசுவாச வாழ்வு**

இப்பாடம் க. தி. வி. 65ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. கடவுளின் ஞானம், அறிவு என்பவைகளின் பொக்கிஷங்கள் யாவும் நம் திருமறையில் அடங்கியிருப்பதால் அதை மேலும் மேலும் அறிந்துகொண்டே இருக்கவேண்டும்.

2. விசுவாச உண்மைகளை அதிகமாக அறிய பிரசங்கங்கள் அறிவுரைகளை கவனமாக கேட்டல், ஞானோபதேச பாடங்களை கற்க ஊக்கம் காட்டல், வேதாகமம், ஞான உபதேசம், பூசைப்புத்தகம், பரிசுத்தர்களின் வரலாறுகள், நல்ல நூல்கள், பத்திரிகைகள், வெளியீடுகளை வாசித்தல் வேண்டும்.

3. நம் விசுவாசத்தை நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதனால் பாதுகாத்தல்வேண்டும்.

4. நமது விசுவாசத்திற்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவை: திருமறைக்கு எதிரானவருடன் நெருங்கிப் பழகுதல், விசுவாசத்தை குறைக்கக் கூடிய நூல்கள், பத்திரிகைகளை வாசித்தல் முதலியன.

5. ஒருவன் விசுவாசத்திற்கு இடையூறுகள் நிறைந்த சூழ்நிலையில் அவசியம் வாழ நேர்ந்தால், அதிகமாக கடவுளிடம் மன்றாட வேண்டும். மெய்மறையை நன்கு கற்றறியக் கவனம் கொள்ள வேண்டும். அடிக்கடி தேவ திரவிய அனுமானங்களை பெறல் வேண்டும்

6. விசுவாசத்திற்கு மாறான பாவங்கள்: விசுவாசத்தில் அசட்டைத்தனம், பிரசங்கங்கள் அறிவுரைகளை கேட்காமல் விடல், விசுவாசத்திற்கு எதிரான நூல்களை வாசித்தல். வேதத்தை பழித்தல், திருச்சபை போதிக்கும் உண்மையில் ஐயப்படுதல், தவறானதை விசுவசித்தல், விசுவாசத்தை மறுதலித்தல் முதலியன.

7. விசுவாசத்திலிருந்து மற்றெல்லாப் புண்ணியங்களும் தழைக்கிறபடியால், இது ஆணிவேருக்கு ஒப்பாயிருக்கிறது.

**பயிற்சிகள்:**

விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. கிறிஸ்துவில் ஞானம்........................ என்பன அடங்கியுள்ளன.

2. நமது விசுவாசத்தை நல்ல................ ........வாழ்வதனால் பாதுகாத்தல் வேண்டும்.

3. விசுவாசத்தை ................................. பெரும் பாவமாகும்.

4. நாம் விசுவாசத்தில் வளர.............. ................அறிவுரைகளை கேட்கவேண்டும்.

5. ''மனிதர் முன்பாக.......................... அறிக்கையிடுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என்................................ முன்பாக அறிக்கையிடுவேன்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விசுவாசக் கண்கொண்டு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மோயீசன் பாலைவனத்தில் பாம்பை உயர்த்தியதுபோல், மனுமகனும் உயர்த்தப்பட வேண்டும்'' (அரு. 3 : 14-15) என்று இயேசு கூறினார். எபிரேய மக்கள் எகிப்திலிருந்து வெளியேறி பலஸ்தீனு நாட்டைநோக்கிப் பாலைவனத்திற்கு ஊடாகப் பயணம் செய்து கொண்டிருந்தபோது கடவுளுக்கும் மோயீசனுக்கும் எதிராக முறுமுறுத்தனர். அதற்குத் தண்டனையாகக் கொள்ளிவாய்ப் பாம்புகளால் தீண்டப்பட்டு அநேகர் மடிந்தனர். அப்போது அவர்கள் மோயீசனிடம் போய் ''நாங்கள் ஆண்டவருக்கு எதிராகப் பேசி பாவம் செய்தோம். பாம்புகள் எங்களைவிட்டு நீங்கும்படி ஆண்டவரை நோக்கி மன்றாடவேண்டும்'' என்றனர். மோயீசன் மக்களுக்காக மன்றாடினார். அப்போது ஆண்டவர், ''ஒரு கொள்ளிவாய்ப் பாம்பின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் ஏற்றிவை. பாம்பினால் தீண்டப்பட்டவன் எவனும் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்'' என்று மோயீசனுக்குக் கட்டளையிட்டார். அப்படியே மோயீசன் ஏற்றிவைத்த பாம்பின் உருவத்தைப் பார்த்தவர்கள் எல்லாரும் தப்பிப் பிழைத்தார்கள் (எண். 21 : 7-9).

பசாசு என்னும் பாம்பினால் தீண்டப்பட்ட நாம் தப்பிப் பிழைப்பதற்கு, பாவங்களுக்குப் பரிகாரமாகச் சிலுவையில் உயர்த்தப்பெற்ற இயேசுவை விசுவாசக் கண்கொண்டு பார்க்கவேண்டும்; நமது பாவங்களுக்காக மனம்நொந்து அவர் இரக்கத்தை இறைஞ்சவேண்டும். ★

## பெற்றதாய்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

சில தடவை கொடுத்தாலும் ஒரு தடவை மறுப்பாளாம். தரமறுத்த தாயை மகன் கன்னத்தில் அடிப்பானும், அடிபட்ட தாயின் வாய் இரத்தம் கசிய 'பாவிப்பயலே' ஏண்டா என்னை அடித்தாய்? எனக் கூறுமாம். ஆனால், அவளுடைய உள்ளமோ தான் பெற்ற மகனுக்கு எவ்வளவு வலிவு இருக்கிறது என எண்ணி மகிழுமாம்'' என்னே தாயின் அன்பு! என்னே அதன் பெருமை !!

ஆகவே, தாயன்பு கண்ணோட்டம் மிக்கது என்பதும், கடுகினும் வஞ்சம் கலவாதது என்பதும், தியாகமே உருவானது என்பதும், தெவிட்டா உறவு என்பதும் இனிது விளங்கிற்றன்றோ? இன்னும் இற்றைநாளில் உள நூல் வல்லார் 'தாயன்பு பெறாது வளரும் குழவிகள் பின்னைநாளில் முரடராய், கொடு மனத்தராய் ஆவரென்றுரைப்பதும் மனித வாழ்வுக்கு தாயன்பு எத்துணை வேண்டற்பாற்றென்பதை நன்கு விளக்கா நிற்கின்றது. எனவே தாயன்புக்கு நிகரானது தரணியிலே எங்கும் காண்டலாகாதாகையால் வாடாத பூ அன்பு, அதுவும் தாயன்பு எனக்கொள்க.

வாடாத பூவின் முடிவைக்கண்ட நாம், இன்னும் ஒருபடி மேல்நின்று ஆய்வோம். தாயன்பு வாடாது, மறக்காது, நாம் ஒறுக்கினும் வெறுக்காது. தாய் மறந்தாள் எனச் சிலர் கூறினால் அஃது அறியாதார் கூற்றென விடுக்க. இஞ்ஞான்று ஞாலத்தின் கண் விரவி நிற்கும் நாகரீக வளர்ச்சியினாலும், மாறுபடும் பல்வேறு பழக்க வழக்கங்களினாலும் அன்பின் புறவெளிப்பாட்டிலும், அதன் வலிமையிலும், நடிப்பும் தளர்ச்சியும் மிகுந்துவருவதை நுழைபுலம் மிக்கோர் கண்டுணர்வர். ஆயினும், யாம் இதுகாறும் ஆய்ந்தவற்றினின்று தாயன்பு மாட்டுவொரு வேறுபாடுங் காண்கிலேம். எனவே, தாயன்பு பண்டு முதனின்று வரை அதன் நிறைவினின்று குறையாநிற்றலையறிக.

ஆனால், தாயினையும் படைத்த தலைவனை இறைவன் கூறுகின்றான்: ''தாய் மறந்தாலும் யாம் உனை மறக்கவறியோம்'' (இசை 50 : 15) என்று. இன்றையச் சமுதாயக் கொந்தளிப்பின் நடுவிலும், அவனியில் அறத்தின் உருமாற்றத்தின் நடுவிலும் நெருக்குண்டு, அருகிருப்போனை அகக்கண்ணால் நோக்காது அலைப்புண்டு நிற்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இறைவன் விடுக்கும் அன்புக் குரலிது. இறையன்பின் நிழலான தாயன்பே தான்பெற்ற பிள்ளையை மறக்க மாட்டாது எனின், அத்தாயினையும் ஏன் அனைத்தையும் மனிதனுக்காகப் படைத்த பேரன்பாளரான இறைவன் நம்மை மறக்க மாட்டுவரோ? உணர்மின். மறக்கேனென்றும் கூறாது ''மறக்க அறியேன்'' என்று மொழிந்த தலைவனை ''மறந்தார்'' என்று மயங்குதல் எத்துணை பேதமை? இறுதியாகத் தாயன்பு இறைவன்றன் பேரன்புக்கு ஒரு சிறு வெளிப்பாடு. இறையன்பென்னும் பேராழிக்கு இட்டுச்செல்லும் ஒரு சிற்றாறு. அத்தாயன்பே வாடப்பூ எனின் இறைவன்றன் பேரன்பு எப்பூவோ? எண்ணுமின்.

''வாழ்க தாயன்பு, வளர்க நம்மில் இறையன்பு''. ★

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் ... வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media